அமர்நாத்: 1.30 லட்சம் பக்தர்கள் தரிசனம்

ஸ்ரீநகர், ஜூலை 4: அமர்நாத் குகைக் கோயிலில் இதுவரை 1.30 லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் தரிசனம் செய்துள்ளனர்.

தெற்கு காஷ்மீரில் இமயமலையில் 3,880 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள அமர்நாத் குகைக் கோயிலில் உருவாகும் பனிலிங்கத்தை தரிசிக்க ஆண்டுதோறும் பக்தர்கள் யாத்திரை மேகொள்கின்றனர்.

நடப்பாண்டு யாத்திரை கடந்த மாதம் 29-ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. 6-ஆவது நாளான வியாழக்கிழமையன்று, சுமார் 25,000 பக்தர்கள் யாத்திரை மேற்கொண்டு, குகைக் கோயிலில் தரிசனம் செய்தனர்.

இதுவரை 1.30 லட்சத்துக்கும் மேற்பட்டோர் தரிசனம் செய்துள்ளதாக, அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமர்நாத் யாத்திரையில் 2 உயிரிழப்புகள் நேரிட்டுள்ளன. பால்டால் வழித்தடத்தில் இரு பக்தர்கள் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்துவிட்டனர். 52 நாள்கள் நடைபெறும் இந்த யாத்திரை ஆகஸ்ட் 19-ஆம் தேதி நிறைவடையவுள்ளது.

கடந்த ஆண்டு குகைக் கோயிலில் 4.5 லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் தரிசனம் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அமர்நாத் யாத்திரையில் மகாகுணாஸ் சிகரப் பகுதியில் பக்தர்களுக்கு உதவும் இந்திய-திபெத் எல்லைக் காவல் படையினர்.

பிரதமர் மோடியுடன் ஆந்திரம், தெலங்கானா முதல்வர்கள் சந்திப்பு

புது தில்லி, ஜூலை 4: ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு மற்றும் தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி ஆகியோர் தனித்தனியே பிரதமர் மோடியை தில்லியில் வியாழக்கிழமை சந்தித்து ஆலோசனை மேற்கொண்டனர்.

தேசிய ஜனநாயக கூட்டணியில் (என்டிஏ) மிக முக்கிய கட்சியாக கருதப்படும் தெலுங்கு தேசம் கட்சியின் தலைவரும் ஆந்திர மாநில முதல்வருமான சந்திரபாபு நாயுடு, அந்த மாநிலத்துக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கவும் கூடுதல் நிதி ஒதுக்கக் கோரியும் பிரதமர் மோடியை அவரது அலுவலகத்தில் சந்தித்தார்.

இதுதொடர்பாக அவர் எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்ட பதிவில்,'ஆந்திர மாநிலத்தின் வளர்ச்சி மற்றும் மேம்பாடு சார்ந்த முக்கிய விவகாரங்களை பிரதமர் மோடியிடம் எடுத்துரைத்தேன். அவர் தலைமையின்கீழ் மீண்டும் சக்திவாய்ந்த மாநிலமாக ஆந்திரம் உருவெடுக்கும் என உறுதியளிக்கிறேன்' என குறிப்பிட்டார்.

இரு நாள்கள் பயணமாக தில்லி சென்றுள்ள சந்திரபாபு நாயுடு மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் நிதின் கட்கரி, வர்த்தகத் துறை அமைச்சர் பியூஷ் கோயல் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் சிவராஜ் சிங் செளஹான் உள்ளிட்டோரை சந்தித்து ஆலோசனை மேற்கொண்டார்.

இதைத்தொடர்ந்து, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் சுகாதாரத்துறை அமைச்சர் ஜெ.பி.நட்டா உள்ளிட்டோரையும் அவர் சந்திப்பார் என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

மோடி-ரேவந்த் சந்திப்பு: தெலங்கானா மாநிலத்தில் நிலுவையில் உள்ள பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை விரைந்து செயல்படுத்துவது தொடர்பாக பிரதமர் மோடியை வியாழக்கிழமை சந்தித்து அந்த மாநில முதல்வர் ரேவந்த் ரெட்டி ஆலோசனை மேற்கொண்டார். அப்போது தெலங்கானா துணை முதல்வர் பட்டி விக்ரமர்கா மல்லு உடனிருந்தார்.

முன்னதாக, அமைச்சர் அமித் ஷாவை சந்தித்த ரேவந்த் ரெட்டி மற்றும் பட்டி விக்ரமர்கா தெலங்கானா மாநில விவகாரங்கள் தொடர்பாக ஆலோசனை மேற்கொண்டனர்.

பிரதமர் மோடியை தில்லியில் சந்தித்த தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி.

ம.பி. 'காலரா' பரவல்: 6 குழந்தைகள் உயிரிழப்பு

இந்தூர், ஜூலை 4: மத்திய பிரதேசத்தின் இந்தூரில் தனியார் குழந்தைகள் காப்பகத்தில் காலரா நோய் பாதிப்பால் கடந்த ஐந்து நாள்களில் 6 குழந்தைகள் உயிரிழந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுதொடர்பாக மாவட்ட நிர்வாகம் அமைத்த உயர்நிலை குழு நடத்திய முதல்கட்ட விசாரணையில் கூடுதல் சேர்க்கை, தவறான மேலாண்மை, குழந்தைகளின் மருத்துவ அறிக்கைகளை முறையாக பராமரிக்காதது உள்பட காப்பகத்தின் பல்வேறு முறைகேடுகள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

இந்தூரின் மல்ஹர்கஞ்ச் பகுதியில் செயல்பட்டு வரும் சிறப்பு குழந்தைகளுக்கான காப்பகத்தில் சுமார் 200-க்கும் மேற்பட்ட குழந்தைகள் தங்கியுள்ளனர். இக்காப்பகத்தில் 8 வயது சிறுவனான அங்கித் கர்க் கடந்த சனிக்கிழமை இரவு உயிரிழந்தார்.

அதிகாரிகளுக்கு தகவலளிக்காமல் சிறுவனின் உடலை காப்பக நிர்வாகிகள் அடக்கம் செய்தனர். இதுகுறித்த தகவல் வெளியானதையடுத்து, 'வலிப்பு' ஏற்பட்டு குழந்தை உயிரிழந்ததாக காப்பகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அடுத்தடுத்த நாள்களில் காப்பகத்தைச் சேர்ந்த 5 குழந்தைகள் உயிரிழந்தனர்.

இதையடுத்து, உயர்நிலை குழு விசாரணைக்கு மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டது. அக்குழுவின் முதல்கட்ட விசாரணையில், காப்பகத்தில் காலரா நோய் பாதிப்பு ஏற்பட்டதும் முறையான நடவடிக்கை எடுக்கப்படாததால் பரவல் அதிகரித்து, குழந்தைகள் அடுத்தடுத்து உயிரிழந்ததும் தெரிய வந்தது.

இதுதொடர்பாக விளக்கமளிக்க காப்பகத்தின் நிர்வாகத்துக்கு நோட்டீஸ் அளிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் ஆஸிஷ் சிங் தெரிவித்துள்ளார்.

காப்பகத்திலுள்ள குழந்தைகளை வேறு இடங்களுக்கு மாற்றும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. காப்பகத்தைச் சேர்ந்த 60 குழந்தைகள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் மூன்று பேரின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

'அக்னிபத்' திட்டம் குறித்து வெள்ளை அறிக்கை

காங்கிரஸ் வலியுறுத்தல்

புது தில்லி, ஜூலை 4: ராணுவ ஆள்சேர்ப்பு நடவடிக்கையான 'அக்னிபத்' திட்டம் குறித்து மத்திய அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்று காங்கிரஸ் கோரிக்கை விடுத்தது.

'அக்னி' வீரர்கள் பணியில் வீரமரணமடைந்தால் ராணுவம் உரிய இழப்பீடு வழங்குவதில்லை என்ற எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியின் குற்றச்சாட்டுக்கு ராணுவம் மறுப்பு தெரிவித்திருந்த நிலையில், காங்கிரஸ் இக்கோரிக்கையை வியாழக்கிழமை முன்வைத்தது.

தில்லியிலுள்ள காங்கிரஸ் தலைமை அலுவலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த அக்கட்சியின் முன்னாள் பாதுகாப்புப் படை வீரர்கள் பிரிவுத் தலைவர் கர்னல் ரோஹித் செளதரி கூறுகையில், 'ராணுவ வீரர்களுக்கும் அக்னி வீரர்களுக்கும் இடையே 'தீண்டாமை' கடைப்பிடிக்கப்படுகிறது.

பஞ்சாப், லூதியாணாவைச் சேர்ந்த அக்னி வீரர் அஜய் குடும்பத்தினருக்கு மத்திய அரசு ரூ.48 லட்சம் மட்டுமே இழப்பீடு வழங்கியுள்ளது. அதேவேளை, பஞ்சாப் மாநில அரசு ரூ.1 கோடியும் தனியார் வங்கி காப்பீடு தொகையாக ரூ.50 லட்சமும் அளித்துள்ளது.

இந்தப் பிரச்னை வீரமரணமடைந்த அக்னி வீரர் அஜய் குறித்தது மட்டுமல்ல. இதுவரை 13 அக்னி வீரர்கள் வீரமரணமடைந்துள்ளனர். எனவே, இவ்விவகாரத்தை நாடாளுமன்றத்தில் எழுப்புவது எதிர்க்கட்சியான காங்கிரஸின் பொறுப்பு.

ஆனால், நாடாளுமன்றத்தில் அமைச்சர் ராஜ்நாத் சிங் தவறான தகவலைக் கூறினார். அவரை தொடர்ந்து, பொய்த் தகவல்களைப் பரப்புவதற்கு ராணுவத்தை மோடி அரசு பயன்படுத்தியுள்ளது.

காங்கிரஸ் ஆட்சியில் அக்னிபத் திட்டம் ரத்து செய்யப்பட்டு, பழைய நடைமுறை கொண்டு வரப்படும். ராணுவத்துக்குத் தேர்வாகி பணியமர்த்தப்படாமல் உள்ள 1.5 லட்சம் இளைஞர்கள் படையில் சேர்க்கப்படுவர். உண்மையான களநிலவரத்தை நாட்டுமக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் அக்னிபத் திட்டம் குறித்த வெள்ளை அறிக்கையை மத்திய அரசு வெளியிட வேண்டும்' என்றார்.

அண்மையில் மக்களவையில் உரையாற்றிய ராகுல், பணியின்போது உயிரிழக்கும் அக்னி வீரர்களுக்கு உரிய இழப்பீடு வழங்காமல் ராணுவம் அநீதி இழைப்பதாக குற்றஞ்சாட்டினார். இதனை மறுத்த பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், உயிரிழக்கும் அக்னி வீரர்களின் குடும்பத்தினருக்கு ரூ.1 கோடி இழப்பீடு வழங்கப்படுவதாக தெரிவித்தார்.

ராஜ்நாத் சிங் கூறியதைப்போல மத்திய அரசின் இழப்பீடு கிடைக்கவில்லை என்று அக்னி வீரர் அஜய்-யின் தந்தை குறிப்பிடும் விடியோவை ராகுல் 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்டார். இதையடுத்து, அஜய் குடும்பத்தினருக்கு ஏற்கெனவே ரூ.98.39 லட்சம் செலுத்தப்பட்டுள்ளதாக ராணுவம் புதன்கிழமை விளக்கமளித்தது.

இண்டியன் பேங்க் இந்தியன் வங்கி
இலாஹாபாத் அலகாபாத்

ஒடுக்கப்பட்ட சொத்துக்கள் மேலாண்மை கிளை - சென்னை
55, எத்திராஜ் சாலை, மண்டல அலுவலகம் கட்டிடம் II தளம், வெல்லிங்டன் எஸ்டேட், எழும்பூர், சென்னை - 600 008. தொலைபேசி : 044 - 2820 2333, 2821 6711.
மின்னஞ்சல் : armb2chennai@indianbank.co.in

பிற்சேர்க்கை IV-A [விதி 8(6) நிபந்தனை பார்க்கவும்]

அசையா சொத்துக்களுக்கான விற்பனை அறிவிப்பு

2002-ஆம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் உடன் வாசிக்கவேண்டிய கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்கம்) விதி 8(6)-ல் வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படியான மின்னணு ஏல அறிவிப்பு (E-auction)

இதன் மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்)-க்கு குறிப்பாகவும் அறிவிக்கப்படுவது யாதெனில் ஈட்டு கடனாளருக்கு அளிக்கப்பட்டுள்ள, கீழே விவரிக்கப்பட்டுள்ள அடமான/பிணைய சொத்துக்களை ஈட்டுக் கடனாளரான இந்தியன் வங்கி, அசோக் நகர் கிளையின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி (தற்போது SAM கிளை, சென்னைக்கு மாற்றப்பட்டுள்ளது) அவர்கள் சுவாதீனம் எடுத்து கொண்டதையடுத்து, கடன் நிலுவைத்தொகையான **ரூ.2,36,87,151.95 (ரூபாய் இரண்டு கோடியே முப்பத்து ஆறு லட்சத்து எண்பத்து ஏழாயிரத்து நூற்று ஐம்பத்து ஒன்று மற்றும் பைசா தொண்ணூற்று ஐந்து மட்டும்) (01.07.2024-ன்படி)** மேலும் 02.07.2024 தேதி முதல் மேலதிக வட்டி, செலவுகள் மற்றும் பிற கட்டணங்களுடன் சேர்த்து வசூலிப்பதற்காக, **"எங்கு உள்ளதோ அங்கு அப்படியே", "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "எப்படியிருந்தாலும் அப்படியே"** என்ற அடிப்படையில், ஈட்டுக் கடனாளரான இந்தியன் வங்கி, அசோக் நகர் கிளையால் (தற்போது SAM கிளை, சென்னைக்கு மாற்றப்பட்டுள்ளது) கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் **24.07.2024** அன்று விற்பனை செய்யப்பட உள்ளது.

கடன்தாரர் / ஜாமீன்தாரர் பெயர் மற்றும் முகவரி **(1) திரு. L. பிரதாபன், (கடன்தாரர்/அடமானதாரர்),** த/பெ திரு. R. லோகநாதன், 5/2, ராஜாஜி தெரு, ரெட்டி குப்பம் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015, **மேலும் இருப்பது :** I146, SBIOA யூனிட்டி என்க்லேவ், I பிளாக், 14வது தளம், கதவு எண்.6, மாம்பாக்கம், சென்னை - 600 127. **(2) திருமதி. J. பத்ம கல்யாணி, (ஜாமீன்தாரர்),** க/பெ திரு. L. பிரதாபன், 5/2, ராஜாஜி தெரு, ரெட்டி குப்பம் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015, **மேலும் இருப்பது :** I146, SBIOA யூனிட்டி என்க்லேவ், I பிளாக், 14வது தளம், கதவு எண்.6, மாம்பாக்கம், சென்னை - 600 127.

சொத்தின் சுருக்கமான விவரம் மின்னணு ஏல முறையில் விற்பனைக்கு கொண்டுவரப்படவுள்ள சொத்தின் முக்கிய விவரங்கள் பின்வருமாறு :

சொத்து 1 - அட்டவணை அ : திருவள்ளூர் தெரு, சர்வே எண்.94, தற்போதைய சர்வே எண்.94/2A3A1A2, எண்.173, சேலையூர் கிராமம், தாம்பரம் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள 11 செண்ட்டுகளிலிருந்து 6 செண்ட்டுகள் அல்லது 2551 சதுர அடி பரப்பளவு கொண்ட சொத்தின் அனைத்து துண்டுகளும் பகுதிகளும். இந்த சொத்து சேலையூர் துணை பதிவு மாவட்டம் மற்றும் சென்னை தெற்கு பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது. **அட்டவணை ஆ :** அட்டவணை அ சொத்திலிருந்து 120 சதுர அடி பிரிக்கப்படாத நிலப்பங்கு கொண்ட சொத்து. **அட்டவணை இ :** "லட்சுமி சரோஜா ரெசிடென்சி" என்னும் கட்டிடத்தில் பொது சேவை பகுதி பங்குடன் சேர்த்து 470 சதுர அடி கட்டிட பரப்பளவு கொண்ட 2வது தளத்தில் உள்ள ஃபிளாட் எண்.S3 மற்றும் தரை தளத்தில் கவர்டு கார் நிறுத்தம் உட்பட. **சொத்து மீதான முந்தைய வில்லங்கங்கள் : இல்லை. சுவாதீன வகை : அடையாளம் சொத்து ID எண். : IDIB462584738A**

ரிசர்வ் விலை : ரூ.18.81 லட்சங்கள் | ஏல அதிகரிப்பு தொகை : ரூ.10,000/- | EMD : ரூ.1.89 லட்சங்கள்

சொத்தின் இருப்பிடம் | சொத்தின் புகைப்படம்

சொத்து 2 - அட்டவணை அ : பழைய எண்.7, பிறகு எண்.27 மற்றும் தற்போது புதிய எண்.44, ரெட்டி குப்பம் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015-ல் உள்ள நிலம் மற்றும் கட்டிடத்தின் அனைத்து துண்டுகளும் பகுதிகளும். ஜமீன் மாம்பலம் கிராமம், மாம்பலம் கிண்டி தாலுகா, சென்னை மாவட்டத்தில் உள்ளது. T S எண்.57, பிளாக் எண்.34-ல் அடங்கியுள்ள 2880 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலம். நேரியல் அளவீடு - கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு பக்கத்தில் 60 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்கு பக்கத்தில் 60 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்கு பக்கத்தில் 48 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்கு பக்கத்தில் 48 அடி. இது தியாகராயநகர் துணை பதிவு மாவட்டம் மற்றும் தென் சென்னை பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது. **அட்டவணை ஆ :** அட்டவணை அ சொத்தில் 150 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு கொண்ட நிலம். **அட்டவணை இ :** விவரக்குறிப்புகளின்படி 600 சதுர அடி பிளிந்த் அளவு கொண்ட அடித்தளத்தில் உள்ள ஃபிளாட் எண்.27/1A. **சொத்து மீதான முந்தைய வில்லங்கங்கள் : இல்லை. சுவாதீன வகை : அடையாளம் சொத்து ID எண். : IDIB462584738B**

ரிசர்வ் விலை : ரூ.33.52 லட்சங்கள் | ஏல அதிகரிப்பு தொகை : ரூ.10,000/- | EMD : ரூ.3.36 லட்சங்கள்

சொத்தின் இருப்பிடம் | சொத்தின் புகைப்படம்

சொத்து 3 - அட்டவணை அ : எண்.3, கிளாம்பாக்கம் கிராமம், ஊரப்பாக்கம் பஞ்சாயத்து, காட்டாங்குளத்தூர் பஞ்சாயத்து யூனியன், செங்கல்பட்டு தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டத்தில் (கடித எண்.PPD/LO எண்.44/85, திருத்தப்பட்ட PPD/LO எண்.82/44 கடித எண்.D2/2781/83 தேதி 27.05.1985-ல் MMDA-வால் அங்கீகரிக்கப்பட்ட தளவமைப்பு) உள்ள காலி நிலத்தின் அனைத்து துண்டுகளும் பகுதிகளும். இதன் மனை எண்.19 பகுதி, சர்வே எண்.209/3-ல் (பட்டாவின்படி எண்.209/9), 1904 சதுர அடியிலிருந்து 952 சதுர அடி பரப்பளவு கொண்டு அடங்கியுள்ளது. அளவீடு - கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு பக்கத்தில் 17 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்கு பக்கத்தில் 17 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்கு பக்கத்தில் 56 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்கு பக்கத்தில் 56 அடி. இது சென்னை தெற்கு பதிவு மாவட்டம் மற்றும் கூடுவாஞ்சேரி துணை பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது. **அட்டவணை ஆ :** அட்டவணை அ சுப்ராவில் விவரிக்கப்பட்டுள்ள 277 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு கொண்ட நிலத்தின் அனைத்து துண்டுகளும் பகுதிகளும். **அட்டவணை இ :** பொது சேவை பகுதியில் பங்குடன் சேர்த்து 1044 சதுர அடி சூப்பர் கட்டிட பரப்பளவு கொண்ட இரண்டாவது தளத்தில் உள்ள ஃபிளாட் எண்.S1, பே-2 என குறிக்கப்பட்ட கவர்டு கார் நிறுத்தம் உட்பட. **சொத்து மீதான முந்தைய வில்லங்கங்கள் : இல்லை. சுவாதீன வகை : அடையாளம் சொத்து ID எண். : IDIB462584738C**

ரிசர்வ் விலை : ரூ.29.50 லட்சங்கள் | ஏல அதிகரிப்பு தொகை : ரூ.10,000/- | EMD : ரூ.2.95 லட்சங்கள்

சொத்தின் இருப்பிடம் | சொத்தின் புகைப்படம்

சொத்து 4 - அட்டவணை அ : எண்.48, சென்னீர்குப்பம் கிராமம், பூந்தமல்லி தாலுகா, திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள நிலத்தின் அனைத்து துண்டுகளும் பகுதிகளும். இதன் மனை எண்.5, "நர்மதா என்க்லேவ்" என்னும் தளவமைப்பில் உள்ளது, ச. எண்.97/1A1 மற்றும் 01.08.1997 தேதியிட்ட PPD/LO/ எண்.34/1997-ன்படி CMDA-வால் அங்கீகரிக்கப்பட்டது. 5904 சதுர அடி பரப்பளவு கொண்டது. இது குன்றத்தூர் துணை பதிவு மாவட்டம் மற்றும் சென்னை தெற்கு பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது. **அட்டவணை ஆ :** மனை எண்.5, "நர்மதா என்க்லேவ்", சென்னீர்குப்பம், சென்னை - 600 056-ல் உள்ள "பிரபால் ரெசிடென்சீஸ்" என்னும் அறியப்படும் கட்டிடத்தின் இரண்டாவது தளத்தில் உள்ள குடியிருப்பு ஃபிளாட் எண்.S-4 மற்றும் 600 சதுர அடி (பொது பகுதி உட்பட) கட்டிட பரப்பளவு கொண்டு மின்தூக்கி மற்றும் கவர்டு கார் நிறுத்த பே எண்.5 உட்பட சேர்த்து உள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள அட்டவணை அ-வில் எண்.48, சென்னீர்குப்பம் கிராமம், பூந்தமல்லி தாலுகா, திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள 251 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு கொண்ட நிலம். **சொத்து மீதான முந்தைய வில்லங்கங்கள் : இல்லை. சுவாதீன வகை : அடையாளம் சொத்து ID எண். : IDIB462584738D**

ரிசர்வ் விலை : ரூ.19.65 லட்சங்கள் | ஏல அதிகரிப்பு தொகை : ரூ.10,000/- | EMD : ரூ.1.97 லட்சங்கள்

சொத்தின் இருப்பிடம் | சொத்தின் புகைப்படம்

சொத்துக்களின் ஆய்வு மற்றும் தொடர்பான ஆவணங்களின் ஆய்வு தேதி மற்றும் நேரம் : 15.07.2024 - 16.07.2024 அன்று காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

மின்னணு ஏல தேதி மற்றும் நேரம் : 24.07.2024 முற்பகல் 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

டெண்டர் படிவம்/EMD சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி : 24.07.2024

விற்பனை அறிவிப்பு | வங்கி இணையதளம் | மின்னணு ஏல இணையதளம்

ஏலதாரர்கள் ஆன்லைன் ஏலத்தில் பங்கேற்பதற்கு எங்களது மின்னணு ஏல சேவை வழங்குநரின் இணையதளத்தை **(www.mstcecommerce.com)** பார்வையிடுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். தொழில்நுட்ப உதவிக்கு MSTC உதவி மைய எண். 033-22901004 மற்றும் சேவை வழங்குநரின் உதவி மையத்தில் உள்ள பிற உதவி எண்களுக்கு அழைக்கவும். MSTC விட் உடன் ஆன பதிவு நிலை பற்றி அறிய தயவுசெய்து **ibapiop@mstcecommerce.com** தொடர்பு கொள்ளவும் மற்றும் EMD நிலை பற்றி அறிய தயவுசெய்து **ibapifin@mstcecommerce.com** தொடர்பு கொள்ளவும்.

சொத்து விவரங்கள் மற்றும் சொத்தின் புகைப்படம் மற்றும் ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு **https://ibapi.in** பார்வையிடவும் மற்றும் இந்த போர்ட்டல் தொடர்பான விவரங்களுக்கு தயவுசெய்து உதவிமைய எண்.'18001025026' மற்றும் '011-41106131' தொடர்பு கொள்ளவும்.

ஏலதாரர்கள் **https://ibapi.in** மற்றும் **www.mstcecommerce.com/auctionhome/ibapi** இணையதளத்தில் உள்ள சொத்து தேடுதலின்போது மேலே குறிப்பிட்டுள்ள **சொத்து ID எண்ணைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.**

தேதி : 03.07.2024
இடம் : சென்னை

**அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
இந்தியன் வங்கி.**

equitas Small Finance Bank

எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்
(முன்னர் எக்விடாஸ் ஃபைனான்ஸ் லிமிடெட் என அறியப்பட்டது)
பெருநிறுவன அலுவலகம்: எண்.769, ஸ்பென்சர் பிளாசா, 4வது தளம், பேஸ் II, அண்ணாசாலை, சென்னை, தமிழ்நாடு - 600002. போன் : 044-42995000, 044-42995050

சுவாதீன அறிவிப்பு அசையா சொத்துக்கானது விதி 8 (1)

கீழே கையொப்பமிட்டுள்ளவர் எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அதிகாரப்பூர்வ அலுவலராக இருக்கின்றபடியால் 2002ம் (54/2002) ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச்சட்டம் பிரிவு 13(12)ன் கீழும், அதற்குத் தொடர்புடைய 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 3-ன் கீழும் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ்க்காணும் கடன்தாரர்களுக்கு / ஜாமீன்தாரர்களுக்கு கீழே குறிப்பிட்டுள்ள தேதியிட்ட கோரிக்கை அறிவிப்புகளை அனுப்பி அந்த அறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் அந்தந்த கோரிக்கை அறிவிப்புகளில் குறிப்பிட்டுள்ள செலுத்த வேண்டியுள்ள கடன் பாக்கிகளைச் செலுத்துமாறு கோரப்பட்டது. ஆனால், கடன்தாரர்கள் கீழ்குறிப்பிட்டுள்ள பாக்கி தொகையை முழுவதும் செலுத்த தவறிவிட்டதால் கடன்தாரர்களுக்கும் / ஜாமீன்தாரர்களுக்கும் / பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில் மேற்படி சட்டம் 13 (4) மற்றும் அதற்குத் தொடர்புடைய மேற்படி விதி 8-ன் கீழ் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை அதிகாரப்பூர்வ அலுவலர் தமது சுவாதீனத்தில் எடுத்துக் கொண்டுள்ளார். எனவே முக்கியமாக கடன்தாரர்களுக்கும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனமாகியுள்ள மேற்படி அடமான சொத்து விஷயத்தில் எவரும் எவ்வித பேரமோ / நடவடிக்கையோ வைத்துக் கொள்ள கூடாது. மீறி வைத்துக் கொண்டால் அது எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-க்கு கீழே குறிக்கப்பட்டவாறு தொகைகளுடன் அதற்குண்டான வட்டி மற்றும் பிற செலவுகள் சேர்த்து செலுத்துவதற்கு கட்டுப்பட்டதாகும். சட்டம் பிரிவு 13 துணை பிரிவு 8-ன் படி கடனீட்டு சொத்துக்களை மீட்டு கொள்வதற்கு கால அவகாசம் உள்ளது என்று கடன்தாரரின் கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது.

கிளை: அரக்கோணம், கணக்கு எண். SEARKNM0234755, கடன்தாரர் / இணை கடன்தாரர் பெயர் : கடன்தாரர்கள்: 1. திருமதி.மேரி க/பெ. ஜெயராமன், 2. திரு.ஜெயராமன், 3. திரு.அருள்செல்வகுமார், 4.திருமதி.கோகிலா, கோரிக்கை அறிவிப்பு தேதி/தொகை: 30.10.2021 & ரூ.2,37,806/- சுவாதீன தேதி : 03.07.2024

அசையா சொத்தின் விவரம்: காஞ்சிபுரம் பதிவு மாவட்டம் மற்றும் ராமகிருஷ்ணா ராஜபேட்டை துணை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு தாலுகா, காத்தனாநகரம் கிராமத்தில், கிராம நத்தம் பழைய சர்வே எண்.265/1 பகுதி, புதிய சர்வே எண்.265/23-ன் படி 2173 சதுர அடி பரப்பளவு நிலம் மற்றும் கட்டிடம், மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும், மற்றும் எல்லைகள்: வடக்கில்: சர்வே எண்.267, தெற்கில்: திரு.வெங்கடேச முதலி அவர்களுக்கு சொந்தமான வீடு, கிழக்கில்: தெரு, மேற்கில்: திரு.நரசிம்மன் அவர்களுக்கு சொந்தமான வீடு,

தேதி : 05.07.2024
இடம் : திருவள்ளூர்

**அதிகாரப்பூர்வ அலுவலர்,
எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்**

equitas Small Finance Bank

எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்
(முன்னர் எக்விடாஸ் ஃபைனான்ஸ் லிமிடெட் என அறியப்பட்டது)
பெருநிறுவன அலுவலகம்: எண்.769, ஸ்பென்சர் பிளாசா, 4வது தளம், பேஸ் II, அண்ணாசாலை, சென்னை, தமிழ்நாடு - 600002. போன் : 044-42995000, 044-42995050

சுவாதீன அறிவிப்பு அசையா சொத்துக்கானது விதி 8 (1)

கீழே கையொப்பமிட்டுள்ளவர் எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அதிகாரப்பூர்வ அலுவலராக இருக்கின்றபடியால் 2002ம் (54/2002) ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச்சட்டம் பிரிவு 13(12)ன் கீழும், அதற்குத் தொடர்புடைய 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 3-ன் கீழும் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ்க்காணும் கடன்தாரர்களுக்கு / ஜாமீன்தாரர்களுக்கு கீழே குறிப்பிட்டுள்ள தேதியிட்ட கோரிக்கை அறிவிப்புகளை அனுப்பி அந்த அறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் அந்தந்த கோரிக்கை அறிவிப்புகளில் குறிப்பிட்டுள்ள செலுத்த வேண்டியுள்ள கடன் பாக்கிகளைச் செலுத்துமாறு கோரப்பட்டது. ஆனால், கடன்தாரர்கள் கீழ்குறிப்பிட்டுள்ள பாக்கி தொகையை முழுவதும் செலுத்த தவறிவிட்டதால் கடன்தாரர்களுக்கும் / ஜாமீன்தாரர்களுக்கும் / பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில் மேற்படி சட்டம் 13 (4) மற்றும் அதற்குத் தொடர்புடைய மேற்படி விதி 8-ன் கீழ் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை அதிகாரப்பூர்வ அலுவலர் தமது சுவாதீனத்தில் எடுத்துக் கொண்டுள்ளார். எனவே முக்கியமாக கடன்தாரர்களுக்கும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனமாகியுள்ள மேற்படி அடமான சொத்து விஷயத்தில் எவரும் எவ்வித பேரமோ / நடவடிக்கையோ வைத்துக் கொள்ள கூடாது. மீறி வைத்துக் கொண்டால் அது எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-க்கு கீழே குறிக்கப்பட்டவாறு தொகைகளுடன் அதற்குண்டான வட்டி மற்றும் பிற செலவுகள் சேர்த்து செலுத்துவதற்கு கட்டுப்பட்டதாகும். சட்டம் பிரிவு 13 துணை பிரிவு 8-ன் படி கடனீட்டு சொத்துக்களை மீட்டு கொள்வதற்கு கால அவகாசம் உள்ளது என்று கடன்தாரரின் கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது.

கிளை: மின்ட், கணக்கு எண். **SEMINT0335647, கடன்தாரர் / இணை கடன்தாரர் பெயர் : கடன்தாரர்கள்: 1. திரு.முத்து. த/பெ. வேலு, 2. திருமதி. மின்னலா க/பெ. முத்து, 3. திரு.வேலு த/பெ. சின்னப்பன், கோரிக்கை அறிவிப்பு தேதி/தொகை:** 23.04.2024 & ரூ. 1,62,774/- **சுவாதீன தேதி :** 03.07.2024

அசையா சொத்தின் விவரம்: வடசென்னை பதிவு மாவட்டம் மற்றும் ஆரணி துணை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தாலுகா, செவிட்டு பணப்பாக்கம் கிராமத்தில், சர்வே எண்.100/1-ன் படி 2600 சதுர அடி பரப்பளவு நிலம் மற்றும் கட்டிடம், மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும், மற்றும் எல்லைகள்: வடக்கில்: சர்வே எண்.69-ல் உள்ள நிலம், தெற்கில்: வழி, கிழக்கில்: சர்வே எண்.100/2-ல் உள்ள நிலம், மேற்கில்: சர்வே எண்.101-ல் உள்ள நிலம். மொத்தம் 2600 சதுர அடி.

தேதி : 05.07.2024
இடம் : சென்னை

**அதிகாரப்பூர்வ அலுவலர்,
எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்**

SBI **பாரத ஸ்டேட் வங்கி**
ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை - II
எண். 44, முதல் தளம், எல்டாம்ஸ் சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018, தொலைபேசி : 044-24338112 / 24340392, மின்னஞ்சல் : sbi.70674@sbi.co.in

கடன்தாரருக்கான கோரிக்கை அறிவிப்பு

2002 ஆம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்தின் உரிமை அமலாக்க சட்டம் பிரிவு 13(2)ன் கீழ் அறிவிப்பு இனிமேல் "சட்டம்" என்று அழைக்கப்படும்)

இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால் கடன்தாரர் அவர்கள் வங்கிக்கு திருப்பிச்செலுத்த வேண்டிய கடனை முறையாகச் செலுத்தத் தவறிவிட்டபடியால், தாங்கள் கடன் கணக்கானது கீழ்குறிப்பிட்டுள்ள வாராகடன் (NPA) பிரிவில் சேர்க்கப்பட்டு விட்டது. 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம் 13(2)ன் கீழ் கடன்தாரர்களுக்கு கோரிக்கை அறிவிப்புகள் வழங்கப்பட்டு அவர்களின் கடைசியாக அறியப்பட்ட முகவரிகளில் அனுப்பப்பட்டு அவைகள் பெறப்படாமல் திரும்ப வந்துவிட்டன என்பதை பொது அறிவிப்பின் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்,

விண்ணப்பதாரர் பெயர் மற்றும் முகவரி; திரு. செந்தில்குமார், த/பெ. திரு. ஜெயராமன், **(1) வெளிநாடு குடியிருப்பு முகவரி:** Building No.17, Flat 301, Albaraha Deira, Dubai, UAE **(2) வெளிநாடு தற்போதைய முகவரி:** 8[th] Block No. 11, Assistant Commissioner Headquarters, Kilpauk, Chennai-600010, **(3) வெளிநாடு அலுவலகத்தின் முகவரி:** Maxisen Office Equipments FZE LLC , Ajamam Media City Free Zone, A-62-00-01-0 Ajman, Dubai, UAE. **(4) KYC முகவரி:** எண்.58/19 (60), மாரியம்மன் கோயில் தெரு, மேல்பட்டி அஞ்சல், திண்டிவனம் வட்டம், விழுப்புரம் -604307, **(5) சொத்தின் முகவரி (1)** Fabiola AV-7, The Village, எண்.106 OMR, காலவாக்கம், சென்னை-603110 **(2)** Fabiola AV-8, The Village, எண்.106 OMR, காலவாக்கம்,சென்னை - 603110.

HTL கணக்கு எண். 39754952103 ; HTL கணக்கு எண். 39754701249 ; அறிவிப்பு தேதி: 06.05.2024; NPA தேதி: 13.10.2023 ; நிலுவைத் தொகை: 06.05.2024 அன்றுள்ளபடி ரூ.4,58,42,343/- [ரூபாய் நான்கு கோடியே ஐம்பத்து எட்டு இலட்சத்து நாற்பத்து இரண்டாயிரத்து முன்னூற்று நாற்பத்து மூன்று மட்டும்] மேலும் எதிர்கால வட்டி, தற்செயலான செலவுகள், கட்டணங்கள்.

அசையாச் சொத்தின் விளக்கம்; சொத்து1 வில்லா எண். 7; திரு.J.செந்தில்குமார் அவர்களின் உரிமைப்பெற்றது. அட்டவணை 'A' தமிழ்நாடு, செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் திருப்போரூர் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், காலவாக்கம் கிராம் சர்வே எண்கள்.225/3B, 226/1C, 227, 229/1A, 241/2B3B, 247/6A, 247/7B, 247/8, 247/9, 247/10, 248/1, 248/2, 248/3, 248/4, 248/5, 248/6, 248/7, 248/8, பழைய சர்வே எண்.199/2, புதிய சர்வே எண்.258/14 ஆகியவற்றில் அமைந்துள்ள ஏக்கர்கள் 40.130 சென்ட்கள் மொத்த விஸ்தீரணங்கொண்ட நிலம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. **எல்லைகள்:** வடக்கில்: சர்வே எண்கள்.223, 241(பகுதி), 231(பகுதி); தெற்கில்: சர்வே எண்கள்.229/2, 241(பகுதி), 228, 229/1B; கிழக்கில்: சர்வே எண்.242; மேற்கில்: சாலை. **அட்டவணை 'B' சொத்து ("விற்பனைப் பரப்பு")** தமிழ்நாடு, காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், காலவாக்கம் கிராம் சர்வே எண்கள்.225/3B, 226/1C, 227, 229/1A, 241/2B3B, 247/6A, 247/7B, 247/8, 247/9, 247/10, 248/1, 248/2, 248/3, 248/4, 248/5, 248/6, 248/7, 248/8, பழைய சர்வே எண்.199/2, புதிய சர்வே எண்.258/14 ஆகியவற்றில் அமைந்துள்ள 40.130 ஏக்கர்களில் தானமளிக்கப்பட்ட 4.385ஏக்கர்களை கழித்தபின் 35.745ஏக்கர்கள் விற்பனைப் பரப்பு கொண்ட நிலம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. **அட்டவணை 'C' சொத்து (இதன் மூலம் தெரிவிக்கப்பட்ட சொத்து)** குறிப்பிடப்பட்ட அட்டவணை 'B' இல் விருப்பம், உரிமை, சொந்தமான மற்றும் பத்திரப்படி 2000ச.அடி பரப்பளவு கொண்ட பிரிக்கப்படாத பங்கு நிலம் அதனைச் சார்ந்த அனைத்தும், அதனுடன் "The Village" என்ற பெயரில் உள்ள திட்டத்தின் பிளாக் எண்.01 இல் உள்ள 2705ச.அடி விற்பனைப் பரப்பு கொண்ட குடியிருப்பு வரிசை வீடு/இணைக்கப்பட்ட வில்லா எண்.07. சொத்தின் முகவரி: Fabiola -AV-7, The Village. எண். 106 OMR, காலவாக்கம், சென்னை-603 110. **சொத்து2 வில்லா எண். 8; திரு.J.செந்தில்குமார் அவர்களின் உரிமைப்பெற்றது. அட்டவணை 'A'** தமிழ்நாடு, செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் திருப்போரூர் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், காலவாக்கம் கிராம் சர்வே எண்கள்.225/3B, 226/1C, 227, 229/1A, 241/2B3B, 247/6A, 247/7B, 247/8, 247/9, 247/10, 248/1, 248/2, 248/3, 248/4, 248/5, 248/6, 248/7, 248/8, பழைய சர்வே எண்.199/2, புதிய சர்வே எண்.258/14 ஆகியவற்றில் அமைந்துள்ள ஏக்கர்கள் 40.130 சென்ட்கள் மொத்த விஸ்தீரணங்கொண்ட நிலம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. **எல்லைகள்:** வடக்கில்: சர்வே எண்கள்.223, 241(பகுதி), 231(பகுதி); தெற்கில்: சர்வே எண்கள்.229/2, 241(பகுதி), 228, 229/1B; கிழக்கில்: சர்வே எண்.242; மேற்கில்: சாலை. **அட்டவணை 'B' சொத்து ("விற்பனைப் பரப்பு")** தமிழ்நாடு, காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், காலவாக்கம் கிராம் சர்வே எண்கள்.225/3B, 226/1C, 227, 229/1A, 241/2B3B, 247/6A, 247/7B, 247/8, 247/9, 247/10, 248/1, 248/2, 248/3, 248/4, 248/5, 248/6, 248/7, 248/8, பழைய சர்வே எண்.199/2, புதிய சர்வே எண்.258/14 ஆகியவற்றில் அமைந்துள்ள 40.130 ஏக்கர்களில் தானமளிக்கப்பட்ட 4.385ஏக்கர்களை கழித்தபின் 35.745ஏக்கர்கள் விற்பனைப் பரப்பு கொண்ட நிலம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. **எல்லைகள்: அட்டவணை 'C' சொத்து (இதன் மூலம் தெரிவிக்கப்பட்ட சொத்து)** குறிப்பிடப்பட்ட அட்டவணை 'B' இல் விருப்பம், உரிமை, சொந்தமான மற்றும் பத்திரப்படி 2000ச.அடி பரப்பளவு கொண்ட பிரிக்கப்படாத பங்கு நிலம் அதனைச் சார்ந்த அனைத்தும், அதனுடன் "The Village" என்ற பெயரில் உள்ள திட்டத்தின் பிளாக் எண்.01 இல் உள்ள 2705ச.அடி விற்பனைப் பரப்பு கொண்ட குடியிருப்பு வரிசை வீடு/இணைக்கப்பட்ட வில்லா எண்.08. சொத்தின் முகவரி: Fabiola -AV-8, The Village. எண். 106 OMR, காலவாக்கம், சென்னை-603 110.

இந்த அறிவிப்பானது மாற்று சேவையாக நடவடிக்கையாக எடுக்கப்பட்டு வருகிறது. மேலே உள்ள **கடன்தாரர்** அவர்கள் கடன் நிலுவைத் தொகையை இந்த அறிவிப்பை வெளியிட்ட **60 நாட்களுக்குள்** நீங்கள் செலுத்தத் தவறினால் 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம் பிரிவு 13(4)ன் கீழ் நடவடிக்கைகளை மேற்கொள்வார்,

கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13 (8) ஷரத்துக்களுக்கு கடன்தாருக்கான கவனம் ஈர்க்கப்படுகிறது.

இந்த அறிவிப்பானது சட்டம் பிரிவு 13 (2)ன் கீழ் இதற்கு முன் அளிக்கப்பட்ட அறிவிப்புகளின் மாற்றி அமைக்கப்பட்டதாகும்.

தேதி: 06.05.2024 ; இடம்: சென்னை **அதிகாரபூர்வ அதிகாரி, SBI, SARB II கிளை, சென்னை**

BAJAJ FINSERV

பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பெருநிறுவன அலுவலகம்: செரிப்ரம் IT பார்க் B2 கட்டடம், 5ஆவது தளம், கல்யாணி நகர், புனே, மகாராஷ்டிரா-411014. கிளை அலுவலகம்: பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்., தரைத்தளம், ஷட்டெள D அம்பா, எண் 37, நெல்சன் மாணிக்கம் சாலை, சென்னை - 600029. அதிகாரப்பூர்வ அலுவலரின் விவரங்கள்: பெயர்: ரதீஷ் ராமச்சந்திரன், மின்னஞ்சல் முகவரி: rathish.ramachandran@bajajfinserv.in, கைப்பேசி எண்: 9940155459 / 8778385461 / 8669189048.

அசையாச் சொத்துக்கள் விற்பனைக்கான E-ஏலப் பொது அறிவிப்பு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 ('சட்டம்') கீழ்

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாக அறிவிப்பது யாதெனில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர் / கூட்டுக் கடன்தாரர் ஆகியோர் கீழ்க்காணும் அசையாச் சொத்தை பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் ('BHFL') நிறுவனத்திடம் அடமானம் வைத்துள்ளனர். இந்த அசையாச் சொத்து ('கடனீட்டுச் சொத்து / சொத்து') SARFAESI சட்டம் 2002 மற்றும் அதன் விதிகளுக்கு ஏற்ப அதிகாரப்பூர்வ அலுவலரால் சுவாதீனம் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் கீழே குறிப்பிட்டுள்ளபடி BHFL-க்கு வர வேண்டியுள்ள கடன் நிலுவைகள், உரிய வட்டி, கட்டணங்கள், செலவினங்கள் முதலானவற்றைத் திரும்பப் பெறும் பொருட்டு இந்தக் கடனீட்டுச் சொத்தானது ஏலக்கோரல் முறையில் பொது ஏலத்தின் மூலம் 09.08.2024 அன்று விற்பனை செய்யப்பட உள்ளது. கடனீட்டுச் சொத்தின் விற்பனையும் ஏலமும் "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்", "மாற்று வழங்கப்பட மாட்டாது" எனும் முறைகளில் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள், விதி எண்கள் 8 & 9 ஆகியவற்றின் கீழ் (இனி 'விதிகள்' எனக் குறிப்பிடப்படும்). இது பின்வரும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க நடத்தப்படும்.

கடன் கணக்கு விவரங்கள் / கடன்தாரர்/கள் மற்றும் ஜாமீன்தாரர்/கள் பெயரும் முகவரியும்	1. E-ஏல நாளும் நேரமும் 2. டேவணித் தொகை [EMD] செலுத்தக் கடைசி நாள் 3. சொத்து ஆய்வுக்கான நாளும் நேரமும் 4. சொத்து விபரம்	• குறைந்தபட்ச விலை • சொத்துக்கான டேவணித்தொகை [EMD] • ஏல உயர்வுத்தொகை
LAN: 403HSLEF628744 & 403TSHEF738620 1. கார்த்திக் M K (கடன்தாரர்), 2. ராதா ஜெகநாதன் (கூட்டுக் கடன்தாரர்), இருவரது முகவரி: B201, இஷா அபிரூபம் வேங்கம்பாக்கம் பிரதான சாலை, கஸ்பாபுரம் சேலையூர், மப்பேடு சந்திப்பு அருகில், சென்னை, தமிழ்நாடு - 600126. **மொத்த நிலுவைத்தொகை: ரூ.41,19,837/-** (ரூபாய் நாற்பத்தொரு இலட்சத்து பத்தொன்பதாயிரத்து எண்ணூற்று முப்பத்தேழு மட்டும்) மற்றும் 25.06.2024 வரையான மேல்வட்டி மற்றும் கட்டணங்கள் உட்பட.	1) **E-ஏல நாளும் நேரமும்:-** 09.08.2024 அன்று முற்பகல் 11:00 மணிக்கும் நண்பகல் 12:00 மணிக்கும் இடையில் எண்ணிக்கை வரம்பின்றி 5 நிமிடக் காலநீட்டிப்புடன். 2) **வாடிக்கையாளர் விவர [KYC] ஆவணங்களுடன் டேவணித் தொகை [EMD] செலுத்தக் கடைசி நாள்:-** 08.08.2024 அன்று மாலை 5:00 மணிக்குள் (இந்திய நேரப்படி). 3) **சொத்து ஆய்வுக்கான நாள்:** 05.07.2024 முதல் 07.08.2024 முடிய முற்பகல் 11:00 மணிக்கும் மாலை 4:00 மணிக்கும் இடையில் (இந்திய நேரப்படி) 4.) **அசையாச் சொத்து விவரம்:** அடுக்குமாடிக் குடியிருப்பு. அடுக்கக எண் B2 201, "இஷா அபிரூபம்". அமைவிடம் - வேங்கம்பாக்கம். அடித்தளப் பரப்பு 882 சதுர அடி மற்றும் பொதுப் பகுதிகள் மற்றும் 526.84 சதுர அடி உட்பட மொத்தப் பரப்பளவான 51349.46 சதுர அடியில் அடங்கியது. சர்வே எண் 1/1 (பாகம்) மற்றும் -1/2 (பாகம்), (பட்டாப்படி சர்வே எண் 1/1B1 & 1/2A1, கஸ்பாபுரம் கிராமம், தாம்பரம் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம். எல்லைகள் பின்வருமாறு: **வடக்கு:** 20 அடி அகலமுள்ள சாலை மற்றும் காலி மனை இடம், **தெற்கு:** சர்வே எண் 1/1 & -1/2 ஆகியவற்றில் உள்ள நிலத்தின் எஞ்சிய பாகம் மற்றும் 30 அடிச் சாலை, **கிழக்கு:** சர்வே எண் 1/4-இல் உள்ள நிலம், **மேற்கு:** 50 அடி அகலமுள்ள சாலை (வேங்கம்பாக்கம் நெடுஞ்சாலை). இது தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் தாம்பரம் சார்பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது. **அசையாச் சொத்தின் விவரம்:** HP பிரிண்டர் - 1, LG குளிர்சாதனபெட்டி - 1, இன்வெர்ட்டர் பேட்டரி - 1, சமையலறை அலமாரி வேலை (முழுமையான வேலை), சிம்னி - 1, பெட்ரூம் அலமாரி வேலை (முழுமையான வேலை), மரமேசை - 2, டீ பாட் டேபிள் - 1, 5 இருக்கை கொண்ட சோஃபா - 1, பிளாஸ்டிக் சேர் - 1.	**அசையாச் சொத்துக்கான குறைந்தபட்ச விலை:-** ரூ.33,00,000/- (ரூபாய் முப்பத்து மூன்று இலட்சம் மட்டும்), **டேவணித்தொகை [EMD]:- ரூ.3,30,000/-** (ரூபாய் மூன்று இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்), குறைந்தபட்ச விலையில் 10% **ஏல உயர்வுத்தொகை:-** ரூ.25,000/- (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) மற்றும் அதன் மடங்குகளில். அசையும் சொத்துக்கான குறைந்தபட்ச விலை:- ரூ.35,000/- (ரூபாய் முப்பத்தைந்தாயிரம் மட்டும்), டேவணித்தொகை [EMD]:- ரூ.3,500/- (ரூபாய் மூன்றாயிரத்து ஐந்நூறு மட்டும்), குறைந்தபட்ச விலையில் 10% **ஏல உயர்வுத்தொகை:-** ரூ.1,000/- (ரூபாய் ஓராயிரம் மட்டும்) மற்றும் அதன் மடங்குகளில்.

பொது ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பின்வருமாறு:

- பொது ஏலமானது "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "மாற்று வழங்கப்பட மாட்டாது" எனும் முறைகளில் நடைபெறும். மேலும் இது பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெடுக்குத் தெரிந்த அல்லது தெரியாத தற்பொழுதுள்ள மற்றும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய வில்லங்கங்களுடனே விற்பனை செய்யப்படுகிறது.
- கடனீட்டுச் சொத்து குறைந்தபட்ச விலைக்குக் குறைவாக விற்பனை செய்யப்பட மாட்டாது.
- இந்த ஏல விற்பனை இணைய வழியில் e-ஏலத் தளத்தில் நடைபெறும்.
- இந்த e-ஏலம் https://bankauctions.in எனும் இணைய முகப்பில் 09.08.2024 அன்று முற்பகல் 11:00 மணியிலிருந்து நண்பகல் 12:00 மணிக்குள் எண்ணிக்கை வரம்பின்றித் தலா 5 நிமிடக் காலநீட்டிப்புடன் நடத்தப்படும்.
- நிறுவனத்தின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், அறியப் பார்க்க வேண்டிய இணையத்தளம்: https://www.bajajhousingfinance.in/auction-notices அல்லது https://bankauctions.in மற்றும் மேலும் விவரங்கள் பெற அதிகாரப்பூர்வ அலுவலரைத் தொடர்பு கொள்ளலாம்.

நாள் : 05.07.2024
இடம் : சென்னை

ஒம்/- (ரதீஷ் ராமச்சந்திரன்)
அதிகாரப்பூர்வ அலுவலர், பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்